**கவனிக்க.-** *2016.05.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1968 - 2016 මැයි මස 20 වැනි සිකුරාදා - 2016.05.20

*1968 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 710 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 711 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 716 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *அக்குறணை பைதுஸ் ஸகாத் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2016, யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மே மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப் பத்திர அறிவித்தல்கள்

## காணி அமைச்சு

### இலங்கை நில அளவைத் திணைக்களம்

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2016**

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2016.06.03 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனு கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | காலி | தென் மாகாண புவிப்பாத்த அளவைப் பிரிவு | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், காலி. | காலிக்கு அண்மையில் | 2016.06.01 |
| தென் மாகாணம் | கம்பஹா | மஹர - களனி | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், இல.150, கிருல வீதி, கொழும்பு 5 | கடவத்த- கிரில்லவல வண்டி வீதிக்கு அண்மையில் | 2016.06.01 |

***பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :***

*அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மாணி மற்றும் மின்மாணி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுகோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் “பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் - (இடத்தின் பெயர்)” எனக் குறிப்பிட்டு 2016.06.03 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05,
2016, மே 02.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2016**
**விலைமனுக்கோரல்- 2016**

*கட்டிட உரிமையாளர் விபரம் -*

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

*கட்டிடம் தொடர்பாக-*

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. இடத்தின் விஸ்தீரணம் :----.
6. கட்டிடத்தின் சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :----.
7. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
8. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
9. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/.................... ) :----.
10. நிறுத்திவைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.
11. பிரதான வீதிக்குச் செல்வதற்கு எடுக்கும் நேர அளவு ? :----.
12. நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதா ? விபரம் தரவும் :----.
13. தொலைபேசி வசதி இருப்பின், தொலைபேசி இலக்கம் :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

*5- 516*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனி கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்.

டெலிமெடிகல் கோபரேஷன் (பிறைவெட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்றை 2016, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

பதிவு அலுவலகம் : இல. 1/1 ஏ, I, பஹல இம்புல்கொட, கம்பஹா
கம்பனி பதிவிலக்கம் : பிவீ 113226
திகதி : 2016, ஏப்பிறல் 29

சபை நிர்வாகிகள் கட்டளைப்படி,

*5-498*

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : ஹிதெல்லன டிஸ்ரிபியூடர்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பிவீ 113085
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.04.12
பதிவு முகவரி : 343/10, ராஜசிங்க மாவத்தை, வேவாகமை, கடுவளை.

கே.எச்.எஸ். கோர்பரேட் சர்விசஸ் லிமிட்டட்,
செயலாளர்கள்.

2016.04.27.

*5-501*

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் :* குளோஸ் கோல்டிங் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பிவி 112976
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.04.07*
*பதிவு முகவரி :* இல. 458/01, கண்டி வீதி, களனி.

ஏ.எஸ். எம். சி. (பிறைவேட்) லிமிட்டட்.

தொ.பே. *2506194*

*5-502*

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் :* ஃபோர்கெட் த ஃபில்டர் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பிவி 112899
*பதிவு முகவரி :* இல. 4/2D, எம்பரர் எப்பர்ட்மென்ட் , காலி வீதி, கொழும்பு 3
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.04.05*

கோர்பரேட் சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*5-510*

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் :* எகோமெக் என்ஜினியரிங் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 110496
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015.12.15*
*பதிவு முகவரி :* இல. 40, பெயார் லைன் வீதி, தெஹிவளை

*5-511*

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*(1) கம்பனியின் பெயர் :* டெக்ஹின்னோ (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 113060
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* L 1/1, இல. 125, அமிட்டி கட்டிடம், ஹைலெவல் வீதி, மஹரகம.
*கூட்டிணைப்புத் திகதி : 2016,* ஏப்பிறல் *11*

*(2) கம்பனியின் பெயர் :* ஆர்வீஆர் இன்டர்நெஷனல் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 113128
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 29, லயன் சிட்டி, லியனகே முல்லை, சீதுவ
*கூட்டிணைப்புத் திகதி : 2016,* ஏப்பிறல் *18*

*(3) கம்பனியின் பெயர் :* ஏஓட புரொப்படீஸ் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 113168
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 29, லோரிஸ் வீதி, கொழும்பு 4
*கூட்டிணைப்புத் திகதி : 2016,* ஏப்பிறல் *19*

*(4) கம்பனியின் பெயர் :* மகி என்டபிறைசஸ் லங்கா (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 113163
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* 97 A, காலி வீதி, கொழும்பு 3
*கூட்டிணைப்புத் திகதி : 2016,* ஏப்பிறல் *19*

கோர்பரேட் சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனிச் செயலாளர்கள்.

*5-518*

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் :* வன் வர்ப் ஹோர்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பிவீ 111017
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.01.05*
*பதிவு முகவரி :* டீன்ஸ்டன் கோர்ட், இல. 01(04 ஆம் மாடி) காலி வீதி, கொழும்பு 03

செயலாளர்கள்.

*5-520*

## பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம், கீழ்க்காணும் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பழைய பெயர் : ஸ்ரீ ஜய ஹொடெல்ஸ் லிமிட்டட்*
*கம்பனி பதிவு இலக்கம் : பீபீ 909*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு 02*
*கம்பனியின் புதிய பெயர் : வன் நைன் டவர்ஸ் லிமிட்டட்*
*பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 2016.04.04*

பணிப்பாளர்/கம்பனி செயலாளர்.

5-522

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் : எல் எஸ் ஈ ஜி. பிஸ்னஸ் சேர்விசஸ் கழம்பு (பிறைவெட்) லிமிட்டட்*
*கம்பனி இல. : பிவீ 113177*
*பதிவு முகவரி : இல. 9/5, தம்பையா அவென்யு, கொழும்பு 7*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.04.19*

ஜேசி என்ட் கம்பனி,
செயலாளர்கள்.

இல. 9/5, தம்பையா அவென்யு,
கொழும்பு 7.

5-534

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2015, வைகாசி 29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் : இன்டிலைஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்*
*கம்பனி இல. : பிவீ 105983*
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 37, பகத்தலை வீதி, கொழும்பு 03*

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ - சேர்வ் (பிறைவெட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

5-591

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ், “ ரோயலி அக்ரோ ( பிறைவெட்) லிமிட்டட் ” பின்வருமாறு பெயர் மாற்றப்பட்டுள்ளது “ரோயலி ஹோம்ஸ் அன்ட் லேண்ட்ஸ் ( பிறைவெட்) லிமிட்டட்” அதற்குரிய சான்றிதழ் 2016, மாசி 29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது*

*கம்பனியின் முன்னைய பெயர் : ரோயலி அக்ரோ (பிறைவெட்) லிமிட்டட்*
*கம்பனி இல. : பீவீ 12773*
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 261/1, பமுனுவ வீதி, மஹரகம*
*கம்பனியின் தற்போதைய பெயர் : ரோயலி ஹோம்ஸ் அன்ட் லேண்ட்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்*

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ - சேர்வ் (பிறைவெட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

5-592

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2016, மாசி 19 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் பெயர் : குளினேரா (பிறைவெட்) லிமிட்டட்*
*கம்பனி இல. : பீவீ 112014*
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 14, ரொடுன்டா கார்டன்ஸ், கொழும்பு 03*

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ - சேர்வ் (பிறைவெட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

5-593

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ், “ எபரல் வெப் 2050 ( பிறைவெட்) லிமிட்டட் ” பின்வருமாறு பெயர் மாற்றப்பட்டுள்ளது “மூன் லேக் ஹொடெல் ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்” அதற்குரிய சான்றிதழ் 2016, சித்திரை 29ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது*

*கம்பனியின் முன்னைய பெயர் :* எபரல் வெப் 2050 (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பீவீ 104894
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 56/10, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 7
*கம்பனியின் தற்போதைய பெயர் :* மூன் லேக் ஹொடெல்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ- சேர்வ் (பிறைவெட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

5-594

---

## பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* சீ கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பிவீ 113204
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016.04.22
*கம்பனியின் பதிவு முகவரி :* 6 ஆம் மாடி, இல. 01, அல்பிரட் ஹவுஸ், கொழும்பு 3

பிஸ்னஸ்மேட் (பிறைவெட்) லிமிட்டட்
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் ஸ்ரீட்,
கொழும்பு 2,
2016.04.29.

5-655

---

## பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* சிட்ரஸ் பிஸ்னஸ் சொலுயூசன்ஸ் (பிறைவெட்) லிமிட்டட்
*கம்பனி இல. :* பிவீ 113134
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016.04.18
*பதிவு முகவரி :* இல. 31 பி, விக்ரமரட்ன அவென்யூ, கொஹுவளை

பிஸ்னஸ்மேட் (பிறைவெட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் ஸ்ரீட்,
கொழும்பு 2,
2016.04.22.

5-656

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* கிளிக் இனோவேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல. :* பீ வீ 113171
*பதிவு முகவரி :* லெவல் 02, பார்ட்லீட் ஹவுஸ், 65, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016. 04.19

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 689

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* ஜலண்ட் ரீபப்ளிக் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல. :* பீ வீ 113121
*பதிவு முகவரி :* 45/23, பிறேபுறூக் வீதி, கொழும்பு 2
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2016. 04.18

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 690

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : மச்சான் மச்சி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.* : பீ வீ 113166
*பதிவு முகவரி* : 47, அலெக்சாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2016. 04. 09

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5-691

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2016.04.11 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஸ்டார் கார்மென்ட்ஸ் குரூப் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.* : பீ வீ 113057
*பதிவு முகவரி* : இல. 1A, யுனிட்டி பிளேஸ் , கொழும்பு 3

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5-692

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : திலின பவர் விக்ஸ் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.* : பீ வீ 69876
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009. 11. 09
*பதிவு செய்யப்பட்ட முகவரி* : இல. 65/1 , கந்தவத்த வீதி, நுகேகொடை

கம்பனிச் செயலாளர்கள்.

5-693

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 78/2A, சமகி மாவத்தை, மகுலுதுவ, பிலியந்தலையில் வசிக்கும் கொழம்பகே டொன் ஜயலத் ஆகிய நான், (தேசிய அடையாள அட்டை இல. 591200453 V கொண்டவர்) பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் அறிவிப்பது என்னவெனில், இல. 78/2 A, சமகி மாவத்தை, மகுலுதுவ, பிலியந்தலையில் வசிக்கும் பண்டிதரத்ன முதியங்ஸேலகே சுஜாதா குமாரி ரத்னாயக( தேசிய அடையாள அட்டை இல. 618292533 V கொண்டவர்) அவர்களின் 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி நியமனம் பெற்ற வெளிநாட்டு (விஷேட) செயலுரிமை வழக்கறிஞர் என்ற பதவி திரும்ப பெறப்படடு, செல்லுபடியாததாக்கப்பட்டு, இரத்துச் செய்யப்பட்டுள்ளது. பண்டிதரத்ன முதியன்சேலாகே சுஜாதா குமாரி ரத்னாயக செய்யப்படும் எந்தவித பரிவர்த்தனைக்கும் எந்த சந்தர்ப்பத்திலும் நான் பொறுப்பு ஏற்க மறுக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

கொழம்பகே டொன் ஜயலத்.

5-456

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

முல்லைத்தீவு , அலம்பில், 475 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சிங்கராசா ஜோசப் பாக்கியநாதர் ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பென்சி. என். ஜோசப் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 475 ஆம் இலக்கத்தையும் 2014.10.21 ஆம் திகதியுடையதும், கொழும்பு 15, மட்டக்குளி, பாம் வீதி, 19/150 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த இராமையா நந்தசேகரன் என்பவரை எனது அற்றோணித் தத்துவக்காரராக நியமிக்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லா தொழிக்கின்றேன்.

மேலும் மேற்குறித்த என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் இதன்பின்னர் அவரால் மேற்கொள்ளப் படும் எந்தவொரு செயல்பாடு, கொடுக்கல், வாங்கலுக்கும் நான் எவ்விதத்திலும் பொறுப்பாளியாக மாட்டேன் என இத்தால் அறிவித்தல் செய்து வெளிப்படுத்துகிறேன்.

*சிங்கராசா ஜோசப் பாக்கியநாதர்.*

5-482

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*புத்தளம், சேர்விஸ் றோட், 29/ 2 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஜெகன்நாதன் கைம்பெண் விக்னேஸ்வரி ஆகிய நான் புத்தளம், சேர்விஸ் றோட், 29 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் ஞானப்பிரகாசத்திற்கு அளிதத் 2015.07.14 இல் புத்தளம் பிரசித்த நொத்தாரிசு என். எம். எம். பிஸ்ருல் அமீனால்*

12023 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணித்தத்துவ பத்திரத்தை இன்று முதல் இரத்துச் செய்து செயலிழக்கச் செய்கின்றேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இலங்கை பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். மற்றும் இன்று முதல் அவர்களால் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளி அல்ல எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வைத்திலிங்கம் ஜெகன்நாதன் கைம்பெண் விக்னேஸ்வரி.

2016.04.20.

5-558

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

களுத்துறை வடக்கு, உக்கல்பொட எதிரிகெலேவத்தை, மவுன்டன் விலேஜ், இலக்கம் 03 இல் வதியும் மத்துக்கோரலாலாகே நிசாந்த குமார ஆகிய நான், 2015.05.02 அன்று இலக்கம் 348 ஐ உடைய, பிரசித்த நொத்தாரிசு திருமதி சம்பிகா லக்மாலி ஜயவர்தனவினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 348 ஐ உடைய அற்றோணித் தத்துவத்தின் கீழ், பதிவிலக்கம் 61- 0880 உடைய பஸ்வண்டி தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட சட்ட ரீதியான அற்றோணி உரித்துடைமை இத்துடன் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக அனைத்து தரப்பினரதும் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதன் பிரகாரம் அவ் அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக அறிவித்துக்கொள்கின்றேன்.

5-604

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா அஸ்கிரியா இலக்கம் 134 என்ற முகவரியில் வதியும் பண்டாரகமகே தொன் சமிந்த பிரியதர்சண குணதிலக்க ( தே.அ.அ.இல. 791671167 ஏ) ஆகிய நான் கண்டி நீதிமன்ற வளவில் பிரசித்த நொத்தாரிசு திரு. ஈ. டபிள்யூ. சனத் பண்டார ஏக்கநாயக்கா என்பவரால் 2016.03.15 அன்று எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 1425 மற்றும் 2016.03.15 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணிதத்துவத்தின் மூலம் மாத்தளை ஹந்துன்கமுவ, அலியாவள, இலக்கம் 424/2 ஆம் இலக்கத்தை யுடைய முகவரியில் வதியும் நிலந்தி தஹநாயக்கா (தே.அ.அ.இலக்கம் 697613226 ஏ ) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணிதத்துவம், 2016.0505 ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்படுவதாக இலங்கைப் பிரசைகள் அனைவருக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

பண்டாரகமகே தொன் சமிந்த பிரியதர்சன குணதிலக.

2016.05.05

5-683

---

# ஏல விற்பனைகள்

### பகிரங்க ஏல விற்பனை

கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

ஏஷியா எஸெஸ்ட் பினான்ஸ் லிமிட்டட், இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 3.

வழக்கு இல. 17532/ எம்பி ....................................வழக்காளி

எதிர்

1. ரத்னாயக்க முதியான்சலாகே கருணாரத்ன, ''கயானி'', இல. 83, மைல்கல், மில்லவிட்டிய, குருவிட்ட,
2. ராமையா நாராயனசாமி, இல. 112/8, ''அஜன்தாஸ் சென்டர்'', கெய்ஸர் வீதி, கொழும்பு 11
3. பியவன்ஸ பத்மலால் குலரத்ன, இல. 56, இரத்தினபுரி வீதி, குருவிட்ட .

............................................எதிராளிகள்

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள விற்பனைக் கட்டளையின் கீழ், ரூபா 2,611,262.53 கொண்ட தொகையை 2004.10.29 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையான 22.5% வட்டியுடன் சேர்த்து முழுக் கொடுப்பனவு மற்றும் செலவு அதாவது தீர்ப்பில் விபரிக்கப் பட்டுள்ள பணம் மற்றும் வட்டி, செலவை அறவிடுவதற்கு இத்துடனுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2016, யூன் 25 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோரளை , கம்மல் பற்று தெற்கு, வீரவில காணிப்பதிவு எல்லைக்குள் வடக்கு கம்மல, கம்மலவில் அமைந்துள்ளதும், ''தலகஹவத்தை, சூரியகஹவத்தை மற்றும் சியம்பலகஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் துண்டு ஏ (பாகம்) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கை, மண் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ.சீ. பரணான்டு புள்ளே அவர்களால் தயாரிக்கப்பட்டு 1996.06.11 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1013 இற்கமைய தற்போது "ததன்கஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் எல்லைகளாவன, வடக்கு: வீதி மற்றும் பிரிஜெட் பெர்ணான்டோ, டொரின் தாபரேயினால் உரிமை கோரப்படும் காணி; கிழக்கு: டொரின் தாபரே மற்றும் ஜெனட் பெர்ணான்டோவினால் உரிமைகோரப்படும் காணி; தெற்கு: அந்தனி பெர்ணான்டோ, கிறிஸ்டோபர் பீரிஸ் மற்றும் புஷ்பா தாபரேவினால் உரிமை கோரப்படும் காணி; மேற்கு: சபினா பெர்ணான்டோவினால் உரிமைகோரப்படும் காணி. இது வரைபடம் இல. 1013 இற்கமைய இரண்டு றூட் முப்பத்தைந்து தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சுக்கள் ( 0ஏ.0றூ.35.10பே) விஸ்தீரணமுடையது. மாரவில காணி பதிவகத்தில் வழியுரிமையுடன் தொகுதி மற்றும் பக்கம் ஜீ 10/97 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

***ஆதனத்திற்கு செல்லும் வழி*** - கொழும்பிலிருந்து புத்தளம் பிரதான வீதி வழியே ஏறக்குறைய 40 கி.மீ சென்று போலவத்தை சந்தியிலிருந்து கம்மல வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, ஏறக்குறைய 01 கி.மீ. சென்று சிறிய பாலத்தையும், சிலையையும் கடந்ததும் வலப்பக்கம் திரும்பி, கொங்கிறீட் வீதியில் 200 மீற்றர் நடந்து சென்று வலப்பக்கம் திரும்பி, 40 மீற்றர் செல்ல சொல்லப்பட்ட ஆதனம் அதே வீதியின் இறுதியில் வலது பக்கமாக அமைந்துள்ளது.

***பணம் செலுத்தும் விதம்*** - உத்தேச கொள்வானவாளர் ஏல முடிவில் பின்வருமாறு பணத்தைச் செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 25% (நூற்றிற்கு இருபத்தைந்து);
2. உள்ளூர் அதகார சபைக்கு 1%;
3. சேதம் விளைவதிலுக்கான கட்டணம் ( முதல் 7,500 ரூபாவிற்காக 150 ரூபா ஒவ்வொரு மேலதிக 1,000 ரூபாவிற்கும் 5 ரூபா) ;
4. ஏலதாரரின் உரித்து மற்றும் முத்திரைக் கட்டணங்கள்;
5. மொத்த விளம்பரச் செலவுகள்;
6. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்;
7. ஏலதாரரின் தொழில்சார் கட்டணங்கள்( கொள்வனவு விலையின் 2 1/2 %)

மிகுதி 75% ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் இவ்வழக்கு இலக்கம் 17532/எம்பி இன் கணக்கில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பற்று வைக்க வேண்டும். கொள்வனவு விலையின் எஞ்சிய தொகையை மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செலுத்தாவிட்டாலல் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 25% ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் நீதிமன்றிற்கு அதிகாரமுண்டு.

நீதிமன்ற கட்டளைப்படி,

ஹேமச்சந்திர தலுவத்த ,
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவு பெற்ற ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

5- 554

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல: 73290367

திரு. ஹல்நெத்தி உபஜேந்ரா பெரேரா குணரத்ன ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.11 ஆந் திகதிய 1932 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.08.31 ஆந் திகதிய திங்கட்கிழமை "டெய்லி நியுஸ்" , "தினகரன்" ,"தினமின" ஆகிய பத்திரிகை களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T & H ஏல நிறுவனத்தினர் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2016.06.11 ஆந்திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவு, களுத்துறை பிரதேச சபை எல்லைகளுள் களுத்துறை தொட்டமுனை வடக்கு களுத்துறை பத்தேயில் இல. 718C, களுத்துறை வில்லேகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெலிகொட கிராமத்தில் அமைந்த வரிமதிப்பீட்டிலக்கம் 06/02 ஐக் கொண்ட "துண்டு E உம் பினவத்தையின் துண்டு A யின் பகுதியும் அல்லது கீனகஹவத்தயின் பகுதி" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். வீ. ரீ. பீ. ஜயசுந்தர தயாரித்த 2011, திசெம்பர் 10 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 11/239 இல் விபரித்த துண்டு X என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : வரைபடம் இல. 1669 இல் துண்டு 5 உம் (10 அடி அகலமான பாதை) ; கிழக்கு : அதே காணியின் துண்டு A யின் மீதிப் பகுதியியும் ; தெற்கு : அதே காணியின் துண்டு B என பதிவு செய்த எனினும் துண்டு E (6 அடி அகலமான பாதை) ; மேற்கு: அதே காணியின் துண்டு C உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 11/239 இன்படி பன்னிரண்டு தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.50பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது G 309/83 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு வெலிகொட கிராமத்தில் அமைந்த "பின்வத்த அல்லது கீனகஹவத்தயின் பகுதி" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. பி. ராஜபக்ஷ தயாரித்த 1946, ஒகத்து 17 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1669 இல் விபரித்த துண்டு 5 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடகிழக்கு : ஜாவத்த வரை பாதையும் ; தென்கிழக்கு : அதேகாணியின் துண்டு 4 உம் ; தென்மேற்கு: ஜுவான்

அப்புவுக்கு சொந்தமான கீனகஹவத்தயின் பகுதியும் ; வடமேற்கு : அதே காணியின் துண்டு 6 உம் எல்லைகளாகக் கொண்டு எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது களுத்துறை காணிப் பதிவகத்தில் G 98/184 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) கே. ஜே. யோகரத்னம்,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மொரட்டுவை - மேற்தரக் கிளை.

5-571

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ ஜா-எல கிளை மூலம் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ (பதிவு இலக்கம் PQ 11) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம்

மேல் மாகாணம், நீர் கொழும்பு பதிவு எல்லையில் கம்பஹா மவாட்டம் ராகம்பத்து அலுத்குருகோரளையில் ஜா-எல பிரதேச சபை எல்லையில் ஏக்கல கிராமத்தில் அமைந்துள்ள ஏக்கல குருந்துவத்த மற்றும் கட்டுவ காணிக்கு நிலஅளவையாளர் எம். டி எட்வேர்ட் 2007.01.25 ஆம் திகதியுடைய வரைபடம் இலக்கம் 4230 A இல் காண்பிக்கப்பட்ட லொட் 16 என அடையாளமிடப்பட்ட காணி,

இக்காணியின் விஸ்தீரணம் ( 0ஏ.0றூ.10 பேர்.)
(இக்காணியில் உள்ள கட்டிடம் மரங்கள் எல்லாம் சேர்த்து) இங்கு கீழ் விபரிக்கப்பட்ட காணியூடாக பாவிக்கும் உரிமையுடன்

ஏக்கல கிராமத்தில் உள்ள ஏக்கல குருந்துவத்த மற்றும் கட்டுவ காணிக்கு நிலஅளவையாளர் எம்.டி எட்வேட் 2007.01.25 ஆந் திகதியுடைய வரைபடம் இல. 4230 A இல் காண்பிக்கப்பட்ட லொட் 20 ( 20 அடி வீதி)

இக்காணியின் விஸ்தீரணம் ( 0ஏ.0றூ.21.35 பேர்.)

கடன் எடுத்த அதுகோரலகே சயிரா கிரிசாந்தி பெரேரா மற்றும் மிஹிந்துகுலசூரிய அலங்காரகே மேரி பெரேரா மற்றும் காணியை ஈடுவைத்த அதுகொரலகே சயிரா கிரிசாந்தி பெரேரா மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடு வைத்துள்ளார்கள்.

மேற்சொல்லப்பட்ட காணியை 2016, யூன் மாதம் 17 ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 2015.11.06 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2015.11.09 ஆந் திகதியுடைய "லக்பிம" "த அய்லன்ட்" மற்றும் "வீரகேசரி" ஆகிய பத்திரிகைகளையும் ஏல விற்பனை விளம்பரத்துக்காக 2016.05.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2016.05.23 ஆந் திகதியுடைய லக்பிம, த அய்லன்ட் மற்றும் வீரகேசரி பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- ஜா-எல நகரத்திலிருந்து 300 மீற்றர் தூரம் நீர்கொழும்பு பக்கம் ஏக்கல வீதியில் திரும்பி 2.5 கி.மீ.ஏக்கல மடம சந்தி வரை சென்று மினுவங்கொட வீதியில் 1.5 கி.மீ. சென்று (விமானப்படை) முகாம் காணியின் இடது பக்கம் மில்லணியம் நகர வீதியில் 1.25 கி.மீ ( நிவாசிபுர வீட்டுத் தொகுதி) தாண்டி 200 மீற்றர் சென்று வலது பக்கம் உள்ள பெத்கம பியச 4 ஆவது ஒழுங்கையில் காணி உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(4) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்த விளம்பர செலவுத் தொகை ;
(7) VAT வரிகள்;

(8) மிகுதி (90%) ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பீஎல்சீயின் பிரதான அலுவலகம் அல்லது ஜா-எல கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 140, நீர்கொழும்பு வீதி, ஜா-எல.

தொலைபேசி இல. : 011-2243614-5,

தொலைநகல் இல.: 011-2243610.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.
மின்னஞ்சல்: senaservice @ sltnet .lk

5-607

## யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

பகிரங்க ஏல விற்பனை

1. சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில் பெலிகல கோரளையின் கம்தொளகபற்றுவில் கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் 74 D இலக்கமுடைய பனாவாக கிராம அலுவலர் பிரிவிற்குள் பனாகவாகவில் அமைந்துள்ள ஹபுகஹமுலஹேன பக்மீகஹமுலஹேன மற்றும் அலவத்துபிட்டியஹேன எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஜி. குலசூரியவினால் தயாரிக்கப்பட்ட 2014.02.19 ஆம் திகதியிடப்பட்ட இல. 698 A உடைய வரைபடத்திட்டத்தின் காணித்துண்டு 1 எனக் குறித்துக்காட்டப்பட்ட அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி கொண்டுள்ள பரப்பளவு ( 0ஏ.1 றூ.8.35பே.) ஒரு றூட் எட்டு தசம் மூன்று ஐந்து பேர்ச்சுக்கள் அத்துடன் கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்த்து.

